திரு. என். கிட்டப்பா : இந்தக் கல்வி அதிகாரிகளில் ஆதித் திராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி வேண்டும்.

Divisions of Madras Corporation

* 224 Q.—THIRU N. DENNIS: THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Madras Corporation have requested the Government to increase the number of divisions in the City;

(b) if so, the details thereof; and

(c) the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு கோட்டத்திலும் பத்தாயிரத்திற்குட்பட்ட வாக்காளர்கள் இருக்கும்படியாக அதன் எல்லைகளை நிர்ணயித்து தற்போதுள்ள 120 கோட்டங்களுக்குப் பதிலாக 150 கோட்டங்கள் அமைப்பதற்கு சென்னை மாநகராட்சி சட்டத்தில் 45-வது பிரிவை திருத்தும்படி சென்னை மாநகராட்சி மன்றம் அரசைக் கேட்டிருந்தது.

(உ) சென்னை மாநகரத்தில் கோட்டங்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்குத் தக்கவாறு சென்னை மாநகராட்சிச் சட்டம் திருத்தப்பெற்றுள்ளது.

THIRU N. DENNIS: Sir, may I know whether the work relating to the delimitation of divisions has been started?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 150 கோட்டங்களாகப் பிரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதுபற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி மாநகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. என். கிட்டப்பா : சென்னை மாநகராட்சிக் கோட்டங்களை அதிகப்படுத்துகின்ற நோக்கில் சென்னை மாநகராட்சிப் பகுதியில் அடங்கிய சட்டப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நமது அரசு மத்திய அரசுக்கு எடுத்து வலியுறுத்தியுள்ளதா ?

1973 மார்ச் 3]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கென்று ஒரு டி-லிமிடேஷன் கமிஷன் மத்திய அரசு நியமிக்க இருக்கிறது. அந்த டி-லிமிடேஷன் கமிஷன் நியமிக்கப்பட்டதற்குப் பிறகு அவர்கள் அதைப்பற்றி ஆலோசிப்பார்கள்.

THIRU K. S. KOTHANDARAMAIAH : Sir, may I know from the Hon. Minister for Education whether the present number of divisions are adequate as per the 1971 census the population of Madras has increased?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மக்களுடைய எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது. ஆனால், மொத்தத்தில் எவ்வளவு தருகிறார்கள் என்பதைப் பொறுத்து தமிழகம் முழுவதையும் பிரிக்க வேண்டி வரும். ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு எவ்வளவு சட்ட மன்றத் தொகுதிகள் என்பதைப் பொறுத்து அதன் எண்ணிக்கை கூடுவது அல்லது அதே நிலையில் இருப்பது முடிவு செய்யப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்பொழுது அதிகரிக்கப்பட்டிருக்கின்ற 150 கோட்டங்களில் பெண்களுக்கு எத்தனை கோட்டங்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கு எத்தனை கோட்டங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை மாநகராட்சி சட்ட விதிகளின்படி பெண்களுக்கென்றோ தாழ்த்தப்பட்டவர்களுக்கென்றோ தனிக் கோட்டங்கள் பிரிக்கப்படவில்லை. சட்டமன்றத் தொகுதியின் அடிப்படையில் ஒரு சட்ட மன்றத் தொகுதிக்கு 12 மாநகராட்சி தொகுதிகள் என்று ஏற்கெனவே இருந்தன என்றால், 12 தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கலாம். எந்த எந்தத் தொகுதி என்று ரொடேஷனில் கோ-ஆப்ட் செய்துகொள்ளலாம். இப்பொழுது அது 16 ஆகவும், 8 ஆகவும் மாற்றப்பட்டிருக்கின்றது.

திரு. நா. வீராசாமி : சென்னை மாநகரத்தில் இருக்கக்கூடிய 120 கோட்டங்களை 150 கோட்டங்களாக ஆக்குவதால், அங்கே வட்டங்களைப் பிரிப்பதற்குக் கொஞ்சம் கால தாமதம் ஆகும் என்று சொல்லப்படுகிறதே, அப்படிக் கால தாமதம் ஆனால் நடைபெறவிருக்கும் தேர்தல் தள்ளிப் போடப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கால தாமதம் ஆகாத அளவுக்குச் செய்ய வேண்டும் என்ற முறையில் ஒரு பக்கம் வாக்காளர் பதிவு நடைபெறுகிறது. மற்றொரு பக்கம் கோட்டங்களாகப் பிரிக்கும் முயற்சியும் நடைபெறுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதனுடைய பணிகள் எப்படிச் செல்லுகின்றன என்று பார்த்த பிறகு முடிவு செய்ய வேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன் : இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்டிருக்கிற இந்தக் கோட்டங்களுக்கு முன்பு இருந்ததைவிட வாக்காளர்களின் எண்ணிக்கை குறையுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இன்னும் கோட்டங்கள் அமையப் பெறவில்லை. அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

கீழ்ப்பாக்கம் மனநோய் மருத்துவமனை

*225 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்ப்பாக்கத்தில் உள்ள மனநோய் மருத்துவமனையை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) கடுமையான மனநோய் உள்ள மனநோயாளிகளுக்கென ரூ. 2.20 லட்சம் செலவில் 20 படுக்கைகள் கொண்ட பகுதியொன்றைக் கட்டுவதற்கான திட்டம் அரசினருடைய பரிசீலனையில் அண்மையில் இருந்தது. இப்பொழுது அது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கான அறிவிப்பு விரைவில் வரும். ஏற்கெனவே அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப் படுகிற கட்டத்திலே உள்ள திட்டங்களில் பல்கலைக்கழக மாணவர் மருத்துவக் கூடம் ரூ. 2.75 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு அண்மையில் திறக்கப் பட இருக்கிறது. மகளிர் மருத்துவப் பகுதி 20 படுக்கைகளைக் கொண்டது. ரூ. 1.2 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு இந்த வாரம் திறக்கப்பட இருக்கிறது. தொழில் வழி மருத்துவக்கூடம் (ஆக்குபேஷன் தெரபி ஸ்கீம் அண்டர் ராபிள் ஸ்கீம்) ரூ. 1.5 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட இருக் கிறது. அது அண்மையில் திறக்கப்பட இருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : இந்த கீழ்ப்பாக்கம் மன நோய் மருத்துவ மனையில் அட்மிஷன் செய்வதில் மிகவும் கண்டிப்பு காட்டப்படுகிறது. அட்மிஷன் செய்யப்படுபவர்கள் போலிஸ் சர்ட்டிபிகேட்டும் மாஜிஸ்ட்ரேட் சர்ட்டிபி கேட்டும் வாங்கிக்கொண்டு வருவதற்குள் அவர்களுக்கு வியாதி அதிகமாகும் தன்மை ஏற்பட்டு விடுகிறது. அட்மிஷனுக்கு வருகிற வியாதியஸ்தர்களை அங்கேயே ஒன்றிரண்டு நாட்கள் வைத்திருந்து சோதித்து, உடனடியாக அட்மிஷன் செய்யவேண்டியதாக இருந்தால் உடனடியாக சேர்த்துக் கொள்ளவும், இல்லையென்றால், அட்மிஷன் செய்வதற்கில்லை என்னும் முடிவு